රාජ්‍ය පරිපාලන හා කළමනාකරණ අමාත්‍යාංශය
**பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு**
**MINISTRY OF PUBLIC ADMINISTRATION AND MANAGEMENT**

ඒකාබද්ධ සේවා අංශය **இணைந்த சேவைகள் பிரிவு** COMBINED SERVICES DIVISION

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව. சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07, இலங்கை. Independence Square, Colombo 07, Sri Lanka

| දුරකතනය | ෆැක්ස් | ඊ-මේල් | වෙබ් අඩවිය |
|---|---|---|---|
| தொலைபேசி: **(94) 011- 2694560** | தொலைநகல்: **(94) 011- 2692254** | மின்னஞ்சல்: **dgcs@pubad.gov.lk** | இணைத்தளம்: **www.pubad.gov.lk** |
| Telephone | Fax | E-mail | Web Site |


| | | |
|---|---|---|
| මගේ අංකය / எனது இல / My No: CS/DOS/21/01/02 | ඔබේ අංකය / உமது இல / Your No: | දිනය / திகதி / Date: 2017.04.19 |

அனைத்து அமைச்சின் செயலாளர்கள்,
அனைத்து நிறுவன தலைவர்கள் மற்றும் மாவட்டச் செயலாளர்களிற்கு,

**<u>அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை பதவிகளிற்குரிய கடமைகளை அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையிலுள்ள அலுவலர்களிற்கு கையளித்தல்</u>**

இவ்விடயம் தொடர்பாக பொது நிர்வாக சுற்றறிக்கை இல.14/2013 மற்றும் அது தொடர்பாக அதற்கு பின் வெளியிடப்பட்ட எனது PA/CS/POLICY எனும் இலக்கமுடைய 2016.04.25 ஆம் திகதிய கடிதம் தொடர்பாக உமது விஷேட அவதானத்திற்கு கொண்டு வருகிறேன்.

02. அதன்படி அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை அலுவலர்களது கடமைகளை அபிவிருத்தி உத்தியோகத்தர் அலுவலர்களிற்கு கையளிக்க கூடாதென அறிவிக்கப்பட்டிருந்தும் அதைக் கவனத்திற் கொள்ளாது சில நிறுவனங்களில் தற்போதும் இவ்வாறான செயற்பாடுகள் நடைமுறையிலிருப்பதாக அதற்குரிய தொழிலாளர் சங்கங்களினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

03. பட்டதாரி நிகழ்ச்சித் திட்டமெனும் விஷேட செயற்திட்டத்தின் கீழ் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களிற்கு அரசினால் செயற்படுத்தப்படும் அபிவிருத்தி கருத்திட்டங்கள் தொடர்பான கடமைகள் கையளிக்கப்பட வேண்டியதுடன் அதன்படி அவ் உத்தியோகத்தர்களிற்கு கடமைகளை கையளிக்குமாறும் முகாமைத்துவ உதவியாளர் சேவையின் பதவிகள் தொடர்பான கடமைகளையோ வேறு சேவைகளுக்குரிய கடமைகளையோ அவர்களிற்கு கையளித்திருப்பின் அவற்றை தாமதியாமல் திருத்தம் செய்யுமாறும், ஒவ்வொரு சேவையிலுள்ள அலுவலர்களிற்கு அவர்களது சேவைப் பிரமாணக் குறிப்பில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ள கடமைகளை மாத்திரம் கையளிக்குமாறும் அனைத்து தரப்பினரையும் தெரியப்படுத்துமாறு தயவுடன் அறியத்தருகிறேன்.

ஒப்பம்./ ஜே.ஜே. ரத்னசிரி
செயலாளர்
பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு

பிரதிகள் :

1. ஜனாதிபதி செயலாளர், ஜனாதிபதி செயலகம் – உமது இல SP/4/3 மற்றும் 2017.03.17 ஆம் திகதிய கடிதத்தின்படி உரிய தேவைகளிற்காக.
2. தலைவர், அகில இலங்கை அரச முகாமைத்துவ உதவியாளர் சங்கம் – உமது 2017.03.07 ஆம் திகதிய கடிதத்தின் படி உரிய தேவைகளிற்காக.